



விருதுநகர் நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.ராஜா கனி அவர்களின் இல்ல திருமண விழாவில் விருதுநகர் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் நேரில் மணமக்களை வாழ்த்தினார்கள். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், நகர திமுக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, பொதுக் குழு உறுப்பினர் சுதாகர் ஆகியோர் இருந்தனர்.





விருதுநகர் வடக்கு மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் மல்லாங்கிணறு ராஜாமணி அம்மாள் திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது . மாவட்டச் செயலாளர் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. உரையாற்றினார். மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வனராஜா, மாநகரக் கழக செயலாளர் உதயசூரியன், சிவகாசி மாநகர மேயர் சங்கீதா இன்பம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ ஆர் ஆர் சீனிவாசன், பால கங்காதரன், நகர் செயலாளர் எஸ் ஆர் எஸ் தனபாலன், செயற்குழு உறுப்பினர் எம் ஏ சந்திரன் மற்றும் மாவட்டம் தோறும் ஒன்றிய, நகர. பேரூர். கழக நிர்வாகிகள். செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதல்:

# ஐ.நா.வின் சிறப்புக் கூட்டத்தில் இந்தியா சார்பில் கண்டனம்!

நியூயார்க், மே. 19-

ஹோர்முஸ் நீரிணையில், வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

எரிசக்தி மற்றும் அதன் விநியோகத்தை பாதுகாப்பதற்கான ஐ.நாவின் பொருளாதார மற்றும் சமூக சபை சிறப்புக் கூட்டத்தில், ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி ஹரிஷ் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், ஹோர்முஸ் நீரிணையில், வர்த்தகக் கப்பல் மீதான தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவித்தார்.

மேலும் வர்த்தக கப்பல்கள் மீதான தாக்குதல்கள், ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் அவர் குறிப்பிட்டார். கப்பல் மாலுமிகளை குறி வைப்பதும், கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தை சீர்குலைப்பதையும் நியாயப் படுத்த முடியாது எனவும் ஹரிஷ் குறிப்பிட்டார்.

ஓமன் நாட்டின் கடற்கரைக்கு அப்பால், இந்தியக் கொடியுடன் சென்ற வர்த்தகக் கப்பல் தாக்கப்பட்ட சில நாட்களுக்குப் பிறகு ஹரிஷ் இந்த கருத்துகளை முன்வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வரும் 28ம் தேதி பக்ரீத் பண்டிகை: தமிழ்நாடு தலைமை காஜி அறிவிப்பு!

சென்னை, மே 19 -

பக்ரீத் பண்டிகை வருகிற 28ம் தேதி கொண்டாடப்படும் என்று தமிழக அரசின் தலைமை காஜி அறிவித்துள்ளார். இஸ்லாமிய ஐம்பெரும் கடமைகளில் ஒன்று புனித ஹஜ் பயணம் ஆகும். புனித மெக்காவுக்குச் சென்று வர சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமும் வாழ்நாளில் ஒருமுறையாவது ஹஜ் பயணம் செல்ல விரும்புவார்கள். இஸ்லாமிய மாதமான துல்ஹஜ் மாதம் 10ம் நாள் இந்தக் கடமை நிறைவேறுகிறது. அதே நாளில் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் பக்ரீத் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

ஹஜ் கடமை நிறைவேறுவதால் இது ‘ஹஜ்ஜுப் பெருநாள்’ என்றும், இறைவனின் கட்டளைக்கு ஏற்ப தன் மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்துப் பலியிட முயன்ற நபி இப்ராகீமின் (அலை) தியாகத்தை நினைவு கூரும் வகையில் ‘தியாகத் திருநாள்’ என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நிலையில் வரும் 28ம் தேதி பக்ரீத் பண்டிகை கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு தலைமை காஜி முஃப்தி உஸ்மான் முஹ்யித்தீன் பாகவி வெளியிட்டுள்ள அறிவிப்பில், “துல்ஹஜ் மாதத்திற்கான பிறை தமிழகத்தில் தென்படாததால் இன்ஷா அல்லாஹ் செவ்வாய் கிழமை(நாளை) துல்ஹஜ் மாத முதல் பிறை என்று இஸ்லாமிய (ஷரீஅத்) முறைப்படி அறிவிக்கப்படுகிறது. ஈதுல் அழ்ஹா (பக்ரீத்) பெருநாள் வரும் 28ம் தேதி(வியாழக்கிழமை கொண்டாடப்படும்” என்று கூறப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் மாநில தலைமையகம் வெளியிட்ட அறிவிப்பில், “தமிழகத்தில் பிறை எங்கும் தென்படவில்லை. எனவே இன்று மஹ்ரிபில் இருந்து தமிழகத்தில் துல்ஹஜ் மாதம் ஆரம்பமாகின்றது. வரும் 27ம் தேதி(புதன்கிழமை) அரஃபா நோன்பு என்பதையும் 28ம் தேதி(வியாழக்கிழமை ஹஜ்) பெருநாள் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கே.சந்திரன் தலைமை! கோ.காமராஜ் – இரா.நரேஷ்கண்ணா வரவேற்புரை!

# பம்மல் வடக்குப் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் அறிவிப்பு!

சென்னை, மே.19-

பம்மல் வடக்கு பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி அவைத் தலைவர் கே.சந்திரன் தலைமையிலும், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் இரா.நரேஷ் கண்ணா எம்.சி. ஆகியோர் வரவேற்புரையிலும், பகுதி கழக துணைச் செயலாளர்கள் மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன், ஜி.பப்பிதா, பகுதி பொருளாளர் ச.பிரபு, தாம்பரம் மாநகர பிரதிநிதிகள் சி.பார்த்த சாரதி, க.சுந்தர மூர்த்தி, இரா. குமரேசன், இரா.பாபுஜி, ஆகியோர் முன்னிலையிலும் இன்று (19.05.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, திருநீர்மலை நாகப்பா நகர் சி.எல்.சி சாலையில் அமைந்துள்ள ஜி.பி. ஹாலில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பம்மல் வடக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் ப. அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப. ஆண்டவன். இ.பாலாஜி. டி.எம்.ஜோசப், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார். சித்ரா தமிழ்குமரன். சண்முகசுந்தரி ஜெயகுமார். சித்ராதேவி முரளிதரன் மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தாம்பரம் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பம்மல் வடக்கு பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், வட்டக் கழக நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றியுரை ஞா.பிரபு பம்மல் வடக்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர். ப.கார்த்திக் பம்மல் வடக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர்

பொருள்: 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 108 வது பிறந்தநாள் விழா. 2. இன்று 18/5/2026 காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள். 3. கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தேனி வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் தேனி வடக்கு மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன் தலைமையில் தேனி தனியார் மண்டபத்தில் நடைபெற்றது முன்னாள் முதல்வர் போடி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார். வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. சிறப்பு உரையாற்றினார் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சரவணகுமார், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜா ரமேஷ். முனியம்மாள் முனியாண்டி’ தெய்வம். மாநில செயற்குழு உறுப்பினர்கள் சங்கர் முருகேசன். மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில் முருகன். திருக்கண்ணன். . மாவட்ட பொருளாளர் சுரேஷ். ஒன்றிய செயலாளர்கள் லட்சுமணன் சக்கரவர்த்தி. ஐயப்பன் கண்ணியம்பட்டி முருகேசன் . நகர செயலாளர்கள் பாலமுருகன் புருஷோத்தமன் முகமது இலியாஸ். நாராயணசாமி. வடக்கு மாவட்ட இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் ஆசிப்கான் பேரூராட்சி தலைவர்கள் மிதின் சக்கரவர்த்தி பால்பாண்டி தமிழ்ச்செல்வி . பேரூர் செயலாளர்கள் . மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்

### மாநில நிதி நிர்வாகம் குறித்த அடிப்படை புரிதல் இல்லாமல்

# பத்தரை லட்சம் கோடி எடுத்துட்டு கழுவிட்டு போய்ட்டாங்க என்பதா?

## அமைச்சர் கீர்த்தனாவுக்கு தங்கம் தென்னரசு கண்டனம்!



சென்னை, மே.19-

மாநிலத்தின் நிதி நிர்வாகம் குறித்தான சாதாரண அடிப்படைப் புரிதல் இல்லாமலும், “பத்தரை லட்சம் கோடி எடுத்துட்டு கழுவிட்டுப் போய்ட்டாங்க” என்று போகிற போக்கில் புழுதி வாரித் தூற்றுவதா? என்று அமைச்சர் கீர்த்தனாவுக்கு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழக தொழில்துறை அமைச்சர் கீர்த்தனா அண்மையில் பேசுகையில், முன்னாள் அரசு பத்தரை லட்சம் கோடி ரூபாயை எடுத்துக்கிட்டு கழுவி விட்டு போய்ட்டாங்க” என்பது போல பேசியிருந்தார். இதற்கு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலடி கொடுத்துள்ளார்.

இது குறித்து முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தனது சமூக வலைதளம் பதிவில் கூறியிருப்பதாவது:

முற்றிலும் உண்மைக்குப் புறம்பாகவும், மாநிலத்தின் நிதி நிர்வாகம் குறித்தான சாதாரண அடிப்படைப் புரிதல் இல்லாமலும், “பத்தரை லட்சம் கோடி எடுத்துட்டு கழுவிட்டுப் போய்ட்டாங்க” என்று போகிற போக்கில் புழுதி வாரித் தூற்றி, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தொழில்துறை அமைச்சர் அவதூறு பரப்புவதும், உள்நோக்கோடு கழகத்திற்கு எதிராக ஆதாரமில்லாமல் மக்களிடையே ஒரு மாய பிம்பத்தை சமூக வலைதள ஜோடனைகள் மூலம் கட்டமைக்க முயற்சிப்பதும், விஷமத்தனமானது மட்டுமல்ல; வன்மையாகக் கண்டிக்கத்தக்கனவும் ஆகும். அரசு நிர்வாகத்தில் அனுபவமின்மை காரணமாக, மக்களை ஏமாற்றிக் குழப்பும் வகையில் தமிழ்நாட்டின் நிதி நிர்வாகம் குறித்து இட்டுக்கட்டிக் கூறுவது அவரது முதிர்ச்சி யின்மையைக் காட்டுகிறது எனினும், அரசு நிர்வாகத்திலும், அமைச்சரவையிலும் பல ஆண்டுகள் அனுபவமிக்கவரான நிதி அமைச்சர் செங்கோட்டையனும், நிதித்துறை நிர்வாக நடைமுறைகளில் நேரடி அனுபவமிக்க தற்போதைய நிதித்துறை செயலாளரும் இடித்துரைத்து தொழில்துறை அமைச்சரின் கற்பனைக் குதிரைக்குக் கடிவாளம் போட்டு நிறுத்த முன்வருவார்களா? அல்லது பொய்யும், புனைகதைகளும் மிக்க இத்தகைய மலிவான பிரசாரங்களுக்குத் துணை போகப் போகிறார்களா?

இவ்வாறு பதிவில் கூறப்பட்டுள்ளது.

**முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி!**

தமிழக முதல்வராக கடந்த 10ம் தேதி ஜோசப் விஜய் பதவியேற்றார். அவர், தனது முதல் உரையிலேயே தமிழக அரசின் கஜானா முழுவதும் துடைக்கப்பட்டு இருப்பதாக குறை கூறினார். இதற்கு முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிலடி கொடுத்து இருந்தார். அதாவது, “அனுமதிக்கப்பட்ட வரம்புக்கு உட்பட்டே தமிழ்நாட்டின் கடன் அளவு இருக்கிறது.

தமிழ்நாடு அரசின் நிதி நிலை பற்றி கடந்த பிப்ரவரி மாதம் பட்ஜெட்லேயே தெளிவா நாங்க சொல்லிட்டோம். அது உங்களுக்குத் தெரியாதா? அதுக்குப் பிறகுதான நீங்க பல வாக்குறுதிகளை மக்களுக்குக் கொடுத்தீங்க?” என்றும் கூறியிருந்தார். இந்த நிலையில் தொழில் துறை அமைச்சர் கீர்த்தனாவும் அவ்வாறே பேசியிருப்பது மீண்டும் சர்ச்சைக்கு வழிவகுத்துள்ளது.

**கண்டிக்கத்தக்கது!**

ஆதாரமில்லாமல் மக்களிடையே ஒரு மாய பிம்பத்தை சமூக வலைதள ஜோடனைகள் மூலம் கட்டமைக்க முயற்சிப்பதும், விஷமத்தனமானது மட்டுமல்ல; வன்மையாகக் கண்டிக்கத்தக்கனவும் ஆகும்.

### கழகக் காவலர் - முன்னாள் அமைச்சர்

# ஏ.கோவிந்தசாமி 57ஆம் ஆண்டு நினைவு நாள்!

## திருவுருவச் சிலைக்கு முன்னாள் எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா மாலை அணிவித்தார்!

விழுப்புரம், மே.19-

விழுப்புரம் சென்னை பைபாஸ் சாலையில் மறைந்த முன்னாள் வேளாண் துறை அமைச்சர் கோவிந்தசாமிக்கு நினைவு மண்டபம் கட்டப்பட்டுள்ளது . இவரது 57 ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டி நேற்று அரசு சார்பில் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் ஏ .ஜி கோவிந்தசாமி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதை அடுத்து திமுக சார்பில் முன்னாள் விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, டாக்டர் இளங்கோவன் ஆகியோர் கோவிந்தசாமி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து திமுக நிர்வாகிகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஏ.ஜி.கோவிந்தசாமி சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ அன்னியூர் சிவா ‘அடுத்து வரவுள்ள முன்னாள் அமைச்சர் ஏ. ஜி கோவிந்தசாமி பிறந்தநாள் நிகழ்ச்சியின் போது இந்த மணிமண்டபத்தில் நிர்வாகிகளுக்கான இலவசம் மருத்துவ முகாம் நடத்துவதற்கான ஏற்பாடு செய்யப்படும்’ என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் காணை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.முருகன், காணை மத்திய ஒன்றிய கழக செயலாளர் ஆர். பி.முருகேசன், தெற்கு மாவட்ட விவசாய அணித் தலைவர் பாபு, ஜீவானந்தம், திருவண்ணைநல்லூர் ஒன்றிய பொருளாளர் எம். கே.கிருஷ்ணமூர்த்தி, வி.சாமளா, ஒன்றிய குழு உறுப்பினர்கள் சாவித்திரி பாலு, ஊராட்சி மன்ற தலைவர்கள் கடையம் விஜயகுமார், அத்தியூர் திருக்கை பாண்டியன், மாவட்ட மகளிர் அணித் தலைவர் சிவமகேஸ்வரி மற்றும் மாவட்ட, ஒன்றிய, பேரூர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.




கழகக் காவலர், முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் 57ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி விழுப்புரம் நெடுஞ்சாலையிலுள்ள அவரது நினைவு மண்டபத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.